தமிழ்நாடு சட்டப் பேரவை.

செவ்வாய்க் கிழமை, 1974 சனவரி 29.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Home Guards.

* 211 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any review of the working of the Home Guards has been undertaken in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) and (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்ற பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

*212. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஊர்க்காவல் படையில் தற்போது பணியாற்றும் பெண்கள் எத்தனை பேர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :—531 பெண்கள்.

திரு ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, இந்த ஊர்க்காவல் படை கிராமப் புறங்களில் இன்னும் அதிகமான அளவுக்குச் செயல்படவில்லை. அதைச் செயல்படுத்த அரசு ஏதேனும் செயற்குறிப்பு வைத்திருக்கிறதா? இந்த அறிக்கையில், டெபுடி சூபரின்டெண்ட் ஆப் போலிஸ் (ஆர்ம்டு ரிசர்வ்)க்கு ஆகும் செலவில் 50 சத வீதத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற பரிந்துரை காணப்படுகிறது. அதைப்பற்றி நமது அரசு முடிவு செய்திருக்கிறதா? இது குறித்து மத்திய அரசைக் கேட்டிருக்கிறதா?

@ 506–507-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 சனவரி 29

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு இவை விரிவாக்குவதுபற்றி அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. இப்பொழுது உள்ள சூழ்நிலையில் விரிவாக்குவதில் பல இடர்ப்பாடுகள் நிதி நிலையைப் பொறுத்து இருக்கின்றன. இதில் 50 சதவீதம் மத்திய அரசும் 50 சதவீதம் மாநில அரசும் என்ற அளவில் மொத்தமாக இதற்காக ஆகும் செலவில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது. ஒன்பது ஆண்டுகளில் மொத்தம் அதற்காக ஆன செலவு ரூ. 69,56,438. இதுவரை மத்திய அரசிடமிருந்து ரூ. 22,62,172 இதற்காக வந்திருக்கிறது. 1972–73ம் ஆண்டில் இதற்கு ஆன செலவு ரூ. 11,74,377 ஆகும். வேறு அலுவலர்கள் நியமிக்கப்பட்டால், அதற்கான செலவை 50 சதவீதம் அளவில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு கோரும்.

திரு. த. சோலையா: தலைவர் அவர்களே, ஊர்க்காவல் படையில் பணியாற்றுகிறவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது சலுகை அளிக்கிறதா என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அவர்களைப் பாராட்டுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இந்த ஊர்க் காவல் படையில் பெண்கள் பணியாற்றுகிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எந்த எந்த மாவட்டங்களில் இப்பொழுது அதிகமாக இருக்கிறார்கள்? இப்பொழுது ஊர்க்காவல் படையினரைக் கண்காணிக்கும் பொறுப்பை அடிஷனல் சார்ஜில் விடுவதை விட அவர்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு டி. எஸ். பி. போடுவது நல்லதல்லவா? அப்படிச் செய்வதானால் எந்த அளவுக்குச் செலவு அதிகமாகும் என்று அரசு பரிசீலனை செய்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்பொழுது சென்னையில் மாத்திரம் காவல் துறை, கூடுதல் டெபுடி சூபரின்டெண்ட் பதவியொன்றை ஏற்படுத்த அனுமதி வழங்கலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டு முடிவும் எடுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு மாவட்டங்களில் இந்த பெண்கள் ஊர்க் காவல் படையினர் இருக்கிறார்கள்.

Salem Engineering College.

* 213 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether it is a fact that the Salem Engineering College has been closed indefinitely in August 1973; and

(*b*) if so, the details thereof ?